பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
19 06 2026 FRIDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், சுமார் 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் ஊக்கத்தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வழங்குகிறார்.

- தமிழ்நாடு, குஜராத், உத்தரபிரதேசம், ஹரியானா மாநிலங்களில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் பருப்பு வகைகளை மொத்தமாக கொள்முதல் செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

- நீட் இளநிலை மருத்துவப் படிப்பு நுழைவுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கென வாட்ஸ்அப் தகவல் சேவையை தேசிய தேர்வு முகமை தொடங்கியுள்ளது.

- மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- Ljubljana சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manush Sha - Diya Chitale இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், சுமார் 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் ஊக்கத்தொகையை பிரதமர் திரு.நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

தமது சமூக வலைதளத்தில் இதுகுறித்து பதிவிட்டுள்ள பிரதமர், நாட்டில் வேலைவாய்ப்பை அதிகரித்து, சமூக பாதுகாப்பை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், இளைஞர்களுக்கு அதிகாரமளிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த ஊக்கத்தொகை வழங்கப்பட இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊக்கத்தொகை வழங்கப்படுவது, வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தை செயல்படுத்துவதில், ஒரு மைல் கல்லாக அமையும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தமிழ்நாடு, குஜராத், உத்தரபிரதேசம், ஹரியானா மாநிலங்களில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் பருப்பு வகைகளை மொத்தமாக கொள்முதல் செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது

மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நடப்பாண்டு ரபி சந்தைப் பருவத்தில் தமிழகத்திலிருந்து 990 மெட்ரிக் டன் வரை பாசிப்பயறு கொள்முதல் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டை விட கூடுதலாக 105 மெட்ரிக் டன்னுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

தமிழகத்தில் பாசிப்பயறுக்கு மொத்த கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை 8 கோடியே 68 லட்சம் ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்திலிருந்து 18 ஆயிரத்து 250 மெட்ரிக் டன்னும், உத்தரபிரதேசத்திலிருந்து 48 ஆயிரத்து 298 மெட்ரிக் டன்னும் பாசிப்பயறு மொத்த கொள்முதல் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசத்திலிருந்து 97 ஆயிரத்து 970 மெட்ரிக் டன் உளுந்து மற்றும் 41 ஆயிரத்து 218 மெட்ரிக் டன் நிலக்கடலை கொள்முதல் செய்யவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் அனுமதி அளித்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நீட் இளநிலை மருத்துவப் படிப்பு நுழைவுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கென வாட்ஸ்அப் தகவல் சேவையை தேசிய தேர்வு முகமை தொடங்கியுள்ளது.

வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று இந்த தேர்வை எழுதும் மாணவர்கள், 7 8 2 7 9 8 0 2 8 7 – என்ற வாட்ஸ்அப் எண் மூலாக தகவல்களை பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய தேர்வு முகமை அளிக்கும் தேர்வு தொடர்பான அனைத்து தகவல்களையும் இந்த வாட்ஸ்அப் எண் மூலம் பெறலாம்.

21ஆம் தேதி மறுதேர்வு எழுதுவதற்கான அனுமதிச் சீட்டை ஏற்கனவே பதிவிறக்கம் செய்தவர்கள் மீண்டும் ஒருமுறை பதிவிறக்கம் செய்ய தேவையில்லை என்று தேசிய தேர்வு முகமை தெளிவுபடுத்தியுள்ளது.

நீட் மறுதேர்வை ஒட்டி டெலிகிராம் செயலி மீது மத்திய அரசு விதித்துள்ள தடை உத்தரவு செல்லும் என்று தில்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இத்தேர்வை ஒட்டி டெலிகிராம் செயலிக்கு 22ஆம் தேதி வரை தற்காலிக தடை விதிக்கப்பட்டிருப்பதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி திரு. Karia, தடை உத்தரவை செயல்படுத்தும் போது, இதுதொடர்பான சட்டத்தில் உள்ள நடைமுறைகளை மத்திய அரசு முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

சர்வதேச கடல்சார் தீர்ப்பாயத்தின் நீதிபதியாக, இந்தியாவின் திரு. பிமல் படேல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச கடல்சார் சட்டம் குறித்த ஐ.நா. உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடுகள், அவரை இப்பொறுப்புக்கு முறைப்படி தேர்ந்தெடுத்துள்ளன.

தற்போது இத்தீர்ப்பாயத்தின் துணைத்தலைவராக உள்ள இந்தியாவின் திருமதி. Neeru Chadha-வின் பதவிக்காலம், வரும் செப்டம்பர் மாதம் முடிவடைகிறது.

அதன் பின்னர், திரு. பிமல் படேல், சர்வதேச தீர்ப்பாய நீதிபதியாக பொறுப்பேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ,.நா. சர்வதேச சட்ட ஆணையத்தில் பணியாற்றி வரும் திரு. பிமல் படேல், குஜராத்தில் உள்ள தேசிய பாதுகாப்பு பல்கலைகழகத்தின் துணைவேந்தராகவும் பொறுப்பு வகித்து வருகிறார்.

>>>>>><<<<<<

தேசிய புத்தக வாசிப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

கேரள மாநிலம், புதுவாயில் நாராயண பணிக்கரின் பிறந்த நாள் ஆண்டுதோறும் தேசிய புத்தக வாசிப்பு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

நூலக இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் நாராயண பணிக்கரின் அறக்கட்டளையின் மூலம் கேரள மக்களிடையே வாசிக்கும் பழக்கம் ஊக்குவிக்கப்பட்டது.

புத்தகம் வாசிக்கும் பழக்கத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில், கடந்த 2017ஆம் ஆண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாராயண பணிக்கரின் பிறந்த நாளை தேசிய புத்தக வாசிப்பு தினமாக அறிவித்தார்.

>>>>>><<<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று லடாக் செல்கிறார்.

நாளை மறுநாள் வரை அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார்.

திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் நாளை லுகுங் கிராமத்திற்குச் செல்கிறார்.

அங்குள்ள சுயஉதவிக் குழுவை சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடுவதுடன், எல்லைப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளையும் நேரில் பார்வையிட உள்ளார்.

இதனைத் தொடர்ந்து, நாட்டின் பாதுகாப்புக்காக உயிர்நீத்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், அங்குள்ள போர் நினைவிடத்திற்குச் சென்று அவர் அஞ்சலி செலுத்துகிறார்.

வரும் ஞாயிற்றுக்கிழமை லே நகரில் வெகுவிமரிசையாக நடைபெறவுள்ள சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களில் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்கிறார்.

>>>>>><<<<<<

காவிரியின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழக சட்டப்பேரவையில் அரசினர் தனித் தீர்மானம் அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேறியது.

இந்த தீர்மானத்தை முதலமைச்சர் திரு. விஜய் இன்று முன்மொழிந்து பேசுகையில், மத்திய அரசின் அனுமதியை பெறாமல் தன்னிச்சையாக காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டும் திட்டத்தை கர்நாடக அரசு மேற்கொள்வதை எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், கர்நாடக அரசின் இந்த செயலுக்கு பேரவை தனது கடும் எதிர்ப்பை பதிவு செய்வதாகவும் தெரிவித்தார்.

அரசினர் தனித் தீர்மானத்திற்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்தன.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின், அஇஅதிமுக சட்டமன்றக் குழு தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் தீர்மானத்தை ஆதரித்து பேசினர்.

>>>>>><<<<<<

உலக குருதி கொடையாளர் தினத்தை முன்னிட்டு, தமிழகத்தின், வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரத்த தான முகாம் நடைபெற்றது.

ரத்ததான முகாமில் பங்கேற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களையும், நினைவுப் பரிசுகளையும் மாவட்ட ஆட்சியர் திருமதி. லீலா அலெக்ஸ் வழங்கினார்.

அப்போது பேசிய அவர், ரத்த தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

(சவுண்ட் பைட் - ஆட்சியர் 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது,

இதனையடுத்து, ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி 44 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

Ljubljana சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manush Sha - Diya Chitale இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 11-4, 11-7, 11-8 என்ற செட்கணக்கில் ஸ்லோவேனியாவின் Peter – Ana Tofant இணையை வென்றது.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் மனிக்கா பத்ரா, ஸ்ரீஜா அகுலா ஆகியோரும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் Manush Sha-வும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

தைவான் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Bela Tamhankar - சீனாவின் Feier Hu இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<